கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



நயினார்கோவில் மேற்கு ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



தாரமங்கலம் நகரம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



வரதராஜன்பேட்டை பேரூர்,
அரியலூர் மாவட்டம்.



அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்.



முஞ்சிறை கிழக்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



அரூர் வடக்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



பெத்தானியாபுரம் பகுதி,
மதுரை வடக்கு மாவட்டம்.



தண்டராம்பட்டு மத்தியம் ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையக் கூட்டரங்கில், நேற்று முன்தினம் (19.8.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள உதவிப் பொறியாளர்களுக்கு, சிறப்பாகப் பணி செய்யவேண்டும் என்பதற்காக அறிவுரைகள் வழங்கும் கலந்துரையாடலில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ .பாஸ்கரபாண்டியன், நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) தலைமைப் பொறியாளர் கு.கோ.சத்தியபிரகாஷ், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், நெடுஞ் சாலைத்துறை/ பொதுப்பணித் துறையைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், சின்னக்காம்பாளையம் பேரூராட்சி, செலாம்பாளையம் வார்டு எண். 9–ல் மூலதன நிதி மானியத்திட்டத்தின் கீழ் ரூபாய் 108.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேரூராட்சி அலுவலகம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ்ராஜா, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியகுழு முன்னாள் தலைவர், மேற்கு ஒன்றியச் எஸ்.வி.செந்தில்குமார், சின்னக்காம்பாளையம் பேரூர் கழகச் செயலாளர் பன்னீர் செல்வம், பேரூராட்சித் தலைவர் கன்னீஸ்வரி செல்லமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதியுடன் சென்று சந்திப்பு!

# வெள்ளக்கோவில் - சங்ககிரி நெடுஞ்சாலை விரிவாக்க கோரிக்கைகளை நிறைவேற்றிடுக!

## ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியிடம் – ஈரோடு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி,ஆக.21-

வெள்ளக்கோவில் - சங்ககிரி NH-381A குறித்த மக்கள் கோரிக்கைகளை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஒன்றிய அமைச்சரிடம் நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதியுடன் சென்று மனு அளித்து வலியுறுத்தி யுள்ளார்.



அதற்கு உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படும் என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி உறுதி தெரிவித்தார்.

கடந்த மாதம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற் றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மற்றும் அமைச்சகத்தின் செயலாளரை தனித்த னியே நேரில் சந்தித்து வெள்ளக்கோவில் முதல் சங்ககிரி சாலை 381A குறித்த சில முக்கிய கோரிக் கைகளை முன்வைத்திருந் தார்.

கோரிக்கைகள் பின்வரு மாறு:

1. வெள்ளக்கோவில் சங் ககிரி இடையிலான NH-381A தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தின் பாதையா னது, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் வீடுகள், விவசாய நிலங்கள் என மக்கள் வாழ்வாதா ரத்தை பாதிக்காத வகை யில் திட்டமிடப்பட வேண் டும்.

2. வெள்ளக்கோவில் சங்ககிரி சாலை NH-381A, ஈரோடு ரயில் நிலையத் திற்கு அருகில் தற்போதுள்ள குறுகிய RUB எண்.352-க்கு பதிலாக ROB மேம்பா லம் கட்டவேண்டும். இந்த மேம்பாலம் ஆனது காளை மாட்டு சிலை முதல் லோட் டஸ் மருத்துவமனை வரை கரூர் பைபாஸ், முத்தூர், மூலனூர் சாலை மற்றும் காங்கேயம்-தாராபுரம் இணைப்புச் சாலைகளை இணைத்து போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்.

இதன் தொடர்ச்சியாக நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழக கட்சித் தலைவர் கனி மொழி கருணாநிதி முன்னி லையில் ஈரோடு நாடாளு மன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரை சந்தித்தார்.

இந்த சந்திப்பில், வெள்ளக் கோவில் - சங்ககிரி NH-381A விரிவாக்கமானது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் மறுசீரமைப்பு செய்யப்ப டும் என உறுதியளித்தார்.

மேலும் ஈரோடு ரயில் நிலையத்திற்கு அருகில் RUB எண்.352-க்கு பதி லாக ROB மேம்பாலம் தேவை என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு உரிய நட வடிக்கை விரைவில் எடுக் கப்படும் என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.